பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 17 புதன்கிழமை 30.04.2025 கதிர் 172



## இது ரகசியம் அல்ல!

அண்மைக் காலமாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார். அது இந்த ஆளும் தரப்பிலுள்ள ☞2

## தேர்தல் பரப்புரை மே 3இல் நிறைவு

உள்ளாட்சித் தேர்தலுக்கான பரப்புரைகள் மே 3 சனிக்கிழமை நள்ளிரவுடன் முடிவடையும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மே 6 நடைபெறும். இந்தத் தேர்தலுக்கான தபால் வாக்குகளை பதிவு செய்யும் பணிகள் நேற்றுடன் நிறைவடைந்தன.

## விசாரணை தொடங்கியது

பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தனது அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்தார் என்று எழுந்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழு, பொலிஸ் புலனாய்வுக் குழுவின் உதவியுடன் நேற்று விசாரணைகளைத் தொடங்கியுள்ளது. இன்றும் விசாரணை தொடரவுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழு ஏப்ரல் 28 நாடாளுமன்ற வளாகத்தில் மூன்றாவது முறையாகக்கூடியது. அந்தக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மூன்று பேர் கொண்ட குழுவின் விசாரணையில் உதவ குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் ☞2

### வாக்காளர் சுதந்திரம் மீது முறையற்ற செல்வாக்குச் செலுத்தி

# சமத்துவம், பாரபட்சமின்மை என்பன ஜனாதிபதி அநுரவால் புறக்கணிப்பு

### ட்ரான்பரன்ஸி அமைப்பு கடும் கவலை தெரிவிப்பு

உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றிபெறும் சபைகளுக்கே முன்னுரிமை வழுங்கப்படும் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார வெளியிடும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வாக்காளர் சுதந்திரத்தின் மீது முறையற்ற செல்வாக்குச் செலுத்துகின்றன. ஜனநாயகத்திற்கு அவசியமான சமத்துவம், பாரபட்சமின்மை, பொறுப்பான தலைமைத்துவம் ஆகிய கொள்கைகள் ஜனாதிபதியால் புறக்கணிக்கப்படுவதையும் இது வெளிப்படுத்துகிறது என்று இலஞ்சம், ஊழலுக்கு எதிரான அமைப்பான ட்ரான்ஸ்பரன்ஸி ஸ்ரீலங்கா அமைப்பு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் ஜனாதிபதியின் செயற்பாடு தொடர்பில் அந்த அமைப்பு கடும் கவலை தெரிவித்துள்ளது. ☞2

## வளச் சுரண்டலை கடுமையாக எதிர்த்து மன்னாரில் இம்முறை மே தின நிகழ்வு

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறை, வளச் சுரண்டல்களுக்கு எதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் மே தின நிகழ்வுகள் மன்னாரில் நடைபெறவுள்ளதாக மக்கள் திட்டவரைபு ஒன்றியத்தின் வட மாகாண பொதுச் செயலாளர் தேவகிருஷ்ணன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுப் பகல் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடக்குமுறைக்கும் வளச் சுரண்டல்களுக்கும் எதிராக மே தினத்தை நினைவுகூர்ந்து வந்துள்ளோம். இந்த நிலையில் நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து முதல் முதலாக மன்னார் நகரில் சுரண்டல் மற்றும் அடக்குமுறைக்கு எதிராக மே தின நிகழ்வை நடத்தவுள்ளோம்.

மன்னாரில் வளச்சுரண்டல்கள் இடம்பெற்று வருவதோடு, மீனவர்கள் பாதிப்பு, காணி அபகரிப்புகள் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை - இந்திய ஒப்பந்தம், அமெரிக்கா - இலங்கை ஒப்பந்தம் போன்றவற்றை செயற்படுத்தும்போது காற்றாலைத் திட்டங்களை செயற்படுத்துகிறபோது மீனவர்களின் வாழ்வாதாரங்கள் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படுகின்றன.

திட்டமிட்ட இந்திய ☞2

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான

## எப்பிஐ அறிக்கையை நிராகரித்தால் ட்ரம்பின் கோபத்திற்கு ஆளாவோம்

### ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கிறார்

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அமெரிக்க புலனாய்வு அமைப்பான எப்பிஐ (FBI) விசாரணை முடிவுகளை இலங்கை நிராகரித்தால் அமெரிக்கா எதிர்மறையாக பதிலளிக்கக்கூடும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார். ☞2

## இரு அரச நிர்வாக உயர் அதிகாரிகள் நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது

70 லட்சம் ரூபாய்க்கு மேல் அரச நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டுத் தொடர்பில், சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் செயலாளர் மற்றும் சப்ரகமுவ மாகாண சாலைகள் அமைச்சின் முன்னாள் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மே 8 வரை விளக்கமறியலில் வைக்க எம்பிலிப்பிட்டிய நீதிவான் திலின மகேஷ் பீரிஸ் நேற்று உத்தரவிட்டார்.

சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண சாலைகள், கிராமிய உள்கட்டமைப்பு, சுற்றுலா மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளராக இருந்து ஓய்வு பெற்றவரான தேவப்பிரிய விஜேராஜா மற்றும் சப்ரகமுவ மாகாண சாலைகள் அமைச்சின் முன்னாள் உதவி திட்டமிடல் பணிப்பாளர் குசும்லதா குமநாயக்க ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசசபைக்கு வழங்கப்பட்ட சபரகமுவ மாகாண சபை நிதியிலிருந்து எழுநூற்று நாற்பத்தைந்தாயிரத்து இருநூற்று இருபத்தாறு ரூபாவை மோசடி செய்தனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் ஒருவர், சமையல்காரர் ஒருவர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் ஆகியோர் இதே நிதி மோசடி தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## தவறான பொதுமன்னிப்புக்கு தண்டம் செலுத்திய மைத்திரி

ரோயல் பார்க் கொலைக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஷ்ரமந்த ஜெயமஹாவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்ததை அடுத்து, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட ஒரு மில்லியன் ரூபாய் இழப்பீட்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செலுத்தினார் அவரது வழக்கறிஞர்கள் நேற்று உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மனுவை ☞2

## மன்னிப்புபெற்ற ஜெயமஹா சிங்கப்பூரை விட்டும் தப்பினார்

ரோயல் பார்க் கொலை வழக்கில் தண்டனை பெற்று பின்னர் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட ஜூட் ஷ்ரமந்த ஜெயமஹா சிங்கப்பூரில் இல்லை என்று இலங்கை சட்டமா அதிபர் துறை உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

அவரது விடுதலை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு மீதான விசாரணை நேற்று நடந்தபோது இந்தத் தகவல் தெரியவந்தது. ஜெயமஹாவை நாடு கடத்துமாறு இலங்கை அதிகாரிகள் சிங்கப்பூரிடம் கோரிய போதிலும், சிங்கப்பூர் அதிகாரிகள் தற்போது அவர் தங்கள் நாட்டில் இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர் என்று சட்டமா அதிபர் தரப்பில் முற்பட்டிருந்த மூத்த அரசு தரப்புச் சட்டத்தரணி சஜித் பண்டார தெரிவித்தார்.

ஜெயமஹாவின் தற்போதைய இருப்பிடத்தைக் கண்டறிய சிறப்பு விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். நீதிமன்ற உத்தரவுக்கு கிட்டத்தட்ட ஒருவருடம் கழித்து அவரைக் கண்டுபிடிப்பதில் முன்னேற்றம் இல்லாதது குறித்து நீதியரசர்கள் துரைராஜா, யசந்த கோடகோடா மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய அமர்வு அதிருப்தி தெரிவித்தது.

அசல் வழக்கு கோப்பை மீட்டெடுப்பதில் உள்ள சிக்கல்கள் காரணமாகத் தாமதங்கள் ஏற்பட்டாலும், சர்வதேச கைது உத்தரவைப் பெறுவதற்கான முயற்சிகள் நடந்து வருவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ஜூலை 28 மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்,

## மாணிக்க கங்கை வீடு தொடர்பில் மற்றுமொருவர் சிஐடியால் கைது

கதிர்காமம் மாணிக்க கங்கை பகுதியில் கட்டப்பட்ட வீடு தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் துணைத் தலைவர் ஒருவர் நேற்றுக் குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டார்.

அந்த வீடு தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்ச ஆகியோரிடமிருந்து குற்றப் புலனாய்வுத் துறை முன்னர் வாக்குமூலங்களைப் பதிவு செய்திருந்தது.

கதிர்காமத்தில் உள்ள இந்த வீடு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பயணங்களுக்கு வசதியாக கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த கட்டடத்தின் நிதி ஆதாரங்கள் மற்றும் கட்டுமான அனுமதிகள் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களம் (CID) விசாரணை நடத்தி வருகிறது.

## இனி இது .....

அமைச்சர்கள் பெருமளவில் பணத்தைச் சேமித்தார்கள் என்கிற விடயம். அதாவது முன்னைய ஆட்சியாளர்கள் போன்று பணத்தை வீண்விரயமாக்காமல் தானும் மற்றைய அமைச்சர்களும் பணத்தைச் சேமிக்கிறார்களாம். இதனால் அரசுக்குப் பெருமளவு பணத்தை மிச்சம் பிடித்துக் கொடுத்திருக்கிறார்களாம். தான் மட்டுமே மாதத்திற்கு 7.4 மில்லியன் ரூபாயை சேமிக்கிறார் என்று அமைச்சர் நளிந்த தெரிவிக்கிறார்.

'நான் அமைச்சருக்கான சம்பளம் வாங்குவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளமும் வாங்குவதில்லை. எனக்கு ஒரே இடத்தில் மூன்று வாகனங்கள் உள்ளன, அதில் ஒரு ா8 வாகனமும் அடங்கும். இன்னொரு இடத்தில் மூன்று வாகனங்கள் உள்ளன. இன்னொரு இடத்தில் இரண்டு வாகனங்கள் உள்ளன. அந்தவாகனங்கள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு வழக்கமான வாகனத்தையே பயன்படுத்துகிறேன். ஒரு அமைச்சருக்கு வழங்கப்படும் எரிபொருள் அளவும் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், நாங்கள் மந்திரி அதிகாரப்பூர்வ இல்லங்களை எடுத்துக்கொள்வதில்லை. இந்த வழியில் பார்க்கும்போது, நாங்கள் நிறையப் பணத்தை மிச்சப்படுத்தியுள்ளோம்" என்று தெரிவிக்கிறார் அவர்.

இதையேன் அவர் சொல்கிறார் என்றால் இப்படியெல்லாம் தாங்கள் தியாகம் செய்து அர்ப்பணிப்புடன் சேமிக்கும் பணத்தை பிரதேச சபைகளுக்குத் தேர்ந்தெடுப்பவர்கள் வீணடித்தால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதுதான். அதாவது ஆளும் தரப்பு வெற்றிபெறாத சபைகளுக்கு நிதியை ஒதுக்க ஒன்றுக்குப் பத்துத் தடவைகள் யோசிப்போம் என்று ஜனாதிபதி அநுர கூறிய கருத்தை நியாயப்படுத்துகிறாராம் அமைச்சர்.

இது தொடர்பில் அமைச்சரிடம் ஒரு கேள்வி. முன்னைய ஆட்சியாளர்கள் செய்தது வீண்விரயம், ஊழல் என்றுதான் நீங்கள் கூறுகின்றீர்கள். அந்தப் பரப்புரையை முன்வைத்துத்தான் மக்களின் கோபத்தைக் கிளறி ஆட்சியைப் பிடித்தீர்கள். இது தொடர்பில் அமைச்சரிடம் ஒரு கேள்வி. முன்னைய ஆட்சியாளர்கள் செய்தது வீண்விரயம், ஊழல் என்றுதான் நீங்கள் கூறுகின்றீர்கள். அந்தப் பரப்புரையை முன்வைத்துத்தான் மக்களின் கோபத்தைக் கிளறி ஆட்சியைப் பிடித்தீர்கள். முன்னைய ஆட்சியாளர்கள் அரச நிதியை வீணடித்தார்கள் என்றால் அவர்கள் தேவையற்றவைகளைச் செய்தார்கள் என்பதுதானே பொருள். அப்படி அவர்கள் தேவையற்றுச் செய்தவைகள் தவறு என்ற பிறகு, அதற்குத் தண்டனையாக அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்த பின்னர், தேவையற்றவைகளைச்செய்யாது விட்டதன் மூலம் நீங்கள் நிதியைச் சேமித்தீர்கள் என்று சொல்வது எப்படிச் சரியாகும்.

முன்னைய ஆட்சியாளர்கள் தேவையற்றதுகளைச் செய்து பணத்தை வீண்விரயம் செய்தார்கள் என்பதால்தான் மக்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆட்சிக்கு வந்த நீங்கள் அவர்கள் செய்தவைகளை நாங்கள் செய்யாமல் தியாகம் செய்கிறோம் என்றால் அதன் பொருள் என்ன? அவர்கள் செய்யக்கூடாதவற்றைச் செய்தார்கள் என்பதால்தான் இன்றைக்கு நீங்கள் ஆட்சியில் இருக்கிறீர்கள். பின்னர் அவர்கள் அதைச் செய்தார்கள் இதைச் செய்தார்கள் ஆனால் நாங்கள் அவற்றையெல்லாம் செய்யவில்லை என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

ஒருவர் பணத்தைத் திருடினார் என்றால் அவர் குற்றம் செய்தார் என்று பொருள். நான் பணத்தைத் திருடவில்லை என்பதால் தியாகம் செய்தேன் என்று அர்த்தமாகிவிடுமா? அதுபோலத்தான் இருக்கிறது அமைச்சரின் கருத்து. முன்னைய ஆட்சியாளர்கள் செய்தவற்றைத்தவறு, குற்றம், வீணடிப்பு என்ற பின்னர் செய்யவேண்டியவற்றைச் செய்வது எப்படித் தியாகம் என்றாகும்? ஆகமொத்தத்தில் நீங்கள் தியாகமும் செய்யவில்லை, அர்ப்பணிப்பும் செய்யவில்லை, திருடர்களை முன்னுதாரணமாக வைத்துக்கொண்டு முறையான செயற்பாடுகளைத் தியாகங்களாக்கிக் காட்டாதீர்கள். அவர்கள் திருடர்கள் என்பதால்தான் நிராகரிக்கப்பட்டார்கள், நீங்கள் ஆட்சியில் இருக்கிறீர்கள். நீங்களும் அவர்கள் போன்று நடந்தால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தூக்கி எறியப்படுவீர்கள். முறையான, மோசடி அற்ற ஆட்சிக்காகத்தான் மக்கள் உங்களை அதிகாரத்திற்குக் கொண்டுவந்தார்கள். அதைச் செய்வது உங்கள் கடமை, பொறுப்பு. அது தியாகம் அல்லது அர்ப்பணிப்பு அல்ல. நீங்கள் செய்கிற ஒவ்வொன்றும் தியாகம்தான் என்கிற வகையில் மக்களை ஏமாற்றப் பார்க்காதீர்கள், அதுவும் குற்றம்தான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சமத்துவம்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் கட்சி வெற்றிபெறும் உள்ளூராட்சி சபைகளுக்கு கேட்டுக் கேள்வியின்றி நிதி ஒதுக்கப்படும் என்றும் ஏனைய கட்சிகள் வெற்றிபெறும் சபைகளுக்கு நிதி ஒதுக்க ஒன்றுக்குப் 10 தடவைகள் யோசிக்கப்படும் என்றும் தேர்தல் கூட்டங்களில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அது தொடர்பிலேயே ட்ரான்பரன்ஸி தனது கடும் கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கைகள் மற்றும் ஊடகவெளியீடுகளின்படி, தற்போதைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் தேர்தல் சட்ட மீறல்களில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டுள்ளதை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (வீணூறீஸி) அவதானிக்கிறது. இது தேர்தல்களை நடத்துவதில் ஒரு சாதகமான முன்னேற்றத்தைக் குறிப்பதோடு, இலங்கையில் ஜனநாயக செயல்முறைகளை வலுப்படுத்துவதில் அரசியல் பங்குதாரர்கள், தேர்தல் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் கூட்டு முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் பிரதிபலிக்கிறது.

பொதுவான முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், விதிமீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், அவை பெரும் கவலையை ஏற்படுத்துகின்றன. பொருட்களை விநியோகிப்பதன் மூலம் வாக்குகளை விலைக்கு வாங்குதல், தாக்குதல்கள் மற்றும் சொத்து சேதம் உள்ளிட்ட வன்முறைகள், மற்றும் தேர்தல் நோக்கங்களுக்காக பொது சொத்துக்களைப் பயன்படுத்துதல் ஆகியவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடந்த தேசிய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், இத்தகைய மீறல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாலும், அவை தொடரும் நிலை ஜனநாயகத்தின் நேர்மையைத் தளர்த்துவதோடு, தேர்தல் செயல்முறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் சிதைக்கிறது.

ஆளும் கட்சி பிரதிநிதிகளை அதிக எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கும் உள்ளூராட்சிப் பிரிவுகளுக்கு முன்னுரிமை அளிப்பதாக ஜனாதிபதி வெளியிடும் சர்ச்சைக்குரிய பொது அறிக்கைகள் கவலையை அதிகரிக்கின்றன. இத்தகைய கருத்துக்கள், வாக்காளர் சுதந்திரத்தின் மீது முறையற்ற செல்வாக்கு செலுத்தப்படுவதற்கான தீவிர கவலைகளை எழுப்புகின்றன. மேலும், செயல்படும் ஜனநாயகத்திற்கு அவசியமான சமத்துவம், பாரபட்சமின்மை, பொறுப்பான தலைமைத்துவம் ஆகிய கொள்கைகள் கவலைக்குரிய வகையில் புறக்கணிக்கப்படுவதையும் இது வெளிப்படுத்துகிறது.

இந்த அணுகுமுறை, தகுதியைவிட கட்சி விசுவாசத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசியல் கலாசாரத்தை நிலைநிறுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளது. மேலும், தேர்தல் காலங்களில் பொது வளங்கள் பேரம் பேசும் பொருட்களாகக் கருதப்படும் நிலைக்கும் இது வழிவகுக்கிறது. குறிப்பாக, மிக உயர்ந்த நேர்மை தேவைப்படும் தேர்தல் காலங்களில், உயர் மட்டத் தலைமைத்துவம் நல்லாட்சிக்கான தரத்தை உறுதி செய்ய வேண்டும்.

நாடு தேர்தல் காலத்தின் இறுதி இரண்டு வாரங்களை நெருங்கிக்கொண்டிருக்கின்ற நிலையில், இந்த முன்னேற்றத்தைப் பாதுகாப்பதும், தேர்தல் செயல்முறையில் ஏற்படும் எந்த விதிமீறல்களையும் உடனடியாகவும் திறம்படவும் கையாள்வதும் மிக முக்கியமாகிறது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கும், தேர்தல் முடிவுகளின் நம்பகத்தன்மையைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு செயலையும் தவிர்ப்பதற்கும், மீண்டும் தங்களை அர்ப்பணிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களை ட்ரான்ஸ்பரன்ஸி கேட்டுக்கொள்கிறது என்றுள்ளது.

## மாணிக்க ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, கதிர்காமம் முருகன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகரா மற்றும் கிரிவேஹெர விகாரையின் முன்னாள் பிரதான பிக்குவின் பெயர்களும் தொடர்புபடுத்தப்படுகின்றது. குணசேகரா, இந்த வீடு ராஜபக்சவுக்குச் சொந்தமானது அல்ல என்றும், அது ஒரு தற்காலிக தங்குமிடமாக கட்டப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்தவீடுகட்டப்பட்டபோதுஇராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டனர் எனவும், இதில் அரச வளங்களை தவறாக பயன்படுத்தியதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

## எப்பிஜ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இசைக்கலைஞர் இராஜ் வீரரத்ன மற்றும் பெரமுன அரசியல்வாதி மிலிந்த ராஜபக்ச ஆகியோருடன் ஒரு நேர்காணலின் போது பேசிய விக்ரமசிங்க, தாக்குதல்களுக்குப் பின்னால் சஹ்ரான் ஹாஷிம்தான் மூளையாக செயல்பட்டார் என்று எவ்.பிஜ. விசாரணையில் முடிவு செய்யப்பட்டதாகக் கூறினார்.

இப்போது இலங்கை வேறுபட்ட கதைகளை ஊக்குவிக்க முயன்றால், அது அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான டொனால்ட் டிரம்பை கோபப்படுத்தக்கூடும் என்றும், அவர் தனது பதவிக் காலத்தில் உக்ரைனின் தலைமையை நடத்தியது போன்ற அதிக வரிகளை விதிப்பதன் மூலமோ அல்லது இராஜதந்திர நடவடிக்கை எடுப்பதன் மூலமோ எதிர்வினையாற்றக்கூடும் என்றும் அவர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பிறகு, ஜனாதிபதி டிரம்ப் தான் தன்னிடம் தனிப்பட்ட முறையில் பேசியதாகவும், விசாரணைகளுக்கு உதவ எவ்பிஜ நியமித்ததாகவும் விக்ரமசிங்கே நினைவு கூர்ந்தார்.

'நான் அமெரிக்க தூதரை தொடர்பு கொண்டபோது, ஒரு எவ்பிஜ குழு ஏற்கனவே நாட்டிற்கு வந்திருந்தது. பின்னர் அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் என்னுடன் பேச விரும்புகிறார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது, நாங்கள் ஒரு தொலைபேசி அழைப்பில் பேசினோம். அந்த நேரத்தில், ஜனாதிபதி டிரம்ப் எப்பிஜ உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கினார். அமெரிக்க தூதருடனான சந்திப்பின்போது, ஒரு எப்பிஜ முகவரும் பங்கேற்றார். ஸ்காட்லாந்து யார்டும் வந்தது, மேலும் இங்கிலாந்தும் உதவி வழங்கியது,' என்று அவர் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்களை அமெரிக்க முகவர் விசாரித்து வந்த நேரத்தில் நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டதாகக் கூறிய விக்ரமசிங்க, டிரம்ப் அதிபராக இருந்தபோது இது நடந்தது என்றார்.

'இப்போது, டொனால்ட் டிரம்ப் மீண்டும் ஜனாதிபதியாகியுள்ளார். சஹ்ரான் ஹாஷிம்தான் மூளையாகச் செயல்பட்டவர் என்று கூறும் அறிக்கையை நான் நம்புகிறேன். இப்போது, இதை மீண்டும் ஒருமுறை நாம் குழப்பினால், என்ன நடக்கும்? ஜனாதிபதி டிரம்பை கோபப்படுத்துவதன் விளைவுகள் உங்களுக்குத் தெரியும். எங்களால் எதுவும் செய்ய முடியாது. இலங்கையில் யாராக இருந்தாலும் சரி, ஜனாதிபதி டிரம்பாக இருந்தாலும் சரி, யாரை கோபப்படுத்துவது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். உண்மையைக் கொண்ட அமெரிக்க -எஃப்.பி.ஐ. அறிக்கை என்னிடம் உள்ளது. இது தொடர்பாக நாம் மோத முடியாது. இது உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கு நடந்தது போன்ற ஒரு சம்பவத்திற்கும், கட்டண உயர்வுக்கும் வழிவகுக்கும்' என்று அவர் எச்சரித்தார்.

## வளச்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் காரணமாக எமது மீனவர்கள் பெரும் நெருக்கடியை சந்திக்கிறார்கள். மேலும், தொடர்ச்சியாக மன்னாரில் உள்ள வளங்களைச் சுரண்டுகின்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. இவற்றை கருத்திற்கொண்டு இவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் வரை இலங்கையில் உள்ள விவசாயிகள், மலையக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, மன்னார் நகரில் ஒன்றுகூடி, இந்த திட்டங்களுக்கு எதிராகவும், மன்னார் மக்களுக்கு ஆதரவாகவும் மே தின பேரணி மற்றும் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

மே 1 பகல் 3 மணிக்கு மன்னார் பஜார் பகுதியில் மே தின கூட்டம் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மே தின ஊர்வலம் ஆரம்பமாகி, வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை பேரணி சென்றடையும். அதன் பின்னர், அங்கு மே தினக் கூட்டம் நடைபெறும்.

மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் நடைபெற்று வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறிப்பாக இந்த ஆட்சிக்கு வந்த பின்னர், ஒரு மாயையான தோற்றத்தை உருவாக்கியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான ஒரு தீர்வினை முன்வைக்க ஜனாதிபதியினால் முடியும். அவர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்பதையும் அவரால் கூற முடியும். மேலும், காணி அபகரிப்புகளும் பல்வேறு முறைகளில் இடம்பெற்று வருகின்றன. மன்னாரில் நடைபெறவுள்ள மே தின ஊர்வலம் மற்றும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நாட்டின் அனைத்து மாகாணங்களில் இருந்தும் மக்கள் மன்னாருக்கு வருகை தரவுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் அடக்குமுறைகள், வளச் சுரண்டல்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் வகையில் இந்த மே தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன என்றார்.

## தவறான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் துரைராஜா, யசந்த கோடகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

கடந்த மார்ச் மாதம் நடந்த விசாரணையின்போது, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன, நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட இழப்பீட்டை பிரதிவாதி மைத்திரிபால சிறிசேன இன்னும் செலுத்தவில்லை என்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து விசாரிக்க நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மைத்திரிபால சிறிசேனவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது.

இருப்பினும், அன்றைய தினம் அறிவிப்பை வெளியிடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, உச்ச நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் பதிவுகளை ஆய்வு செய்ததில் இருந்து பிரதிவாதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட இழப்பீட்டை செலுத்தியுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது என்று ஜனாதிபதி வழக்கறிஞர் சஞ்சீவ ஜெயவர்தன நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபாவும், தனது கட்சிக்காரர் உரிய இழப்பீட்டை செலுத்திவிட்டார் என்பதை உறுதிப்படுத்தினார்.

மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மைத்திரிபால சிறிசேன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, சாட்சியங்களை முன்வைத்து, நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட இழப்பீட்டை தனது கட்சிக்காரர் ஏற்கனவே செலுத்திவிட்டதால் அவரை விடுவிக்குமாறு கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சம்பந்தப்பட்ட வழக்கிலிருந்து விடுவிக்க உத்தரவிட்டது.

## விசாரணை...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்தும் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# மே 18 இல் உயிரிழந்தவர்களுக்கு மாநகர எல்லைக்குள் நினைவுதூபி

## வவுனியாவில் கோடாரி சுயேச்சை வேட்பாளர் புஸ்பதேவா உத்தரவாதம்

மே 18 இல் உயிரிழந்தவர்களுக்காக வவுனியா மாநகரசபை எல்லைக்குள் தூபி அமைக்கப்படும் என வவுனியா மாநரகர சபையில் கோடாலிச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் ம.புஸ்பதேவா தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் -

காலத்தின் தேவை கருதியே நாம் இந்த தேர்தலில் களம் இறங்கியுள்ளோம். எங்களை தெரிவு செய்தால் அரசியல் அற்ற கிராம சேவகர்களாக நாங்கள் நிச்சயம் செயற்படுவோம். எமது சுயேச்சை குழுவானது மாநகர சபையின் அனைத்து வட்டாரங்களிலும் வசிக்கின்ற அந்த பகுதிகளில் வாக்குரிமைகளை கொண்ட வெற்றி வேட்பாளர்களைக் களம் இறக்கியுள்ளது.

இந்த தேர்தலில் ஒவ்வொரு கிராமத்திலும் வட்டாரத்திலும் அனைவருக்கும் தெரிந்தவர்களே போட்டியிடுகின்றனர். எனவே தெரிந்தவர்கள் என நீங்கள் அனைவரும் வாக்கை அளித்தால் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு தெரியாதவர்களே தெரிவு செய்யப்படுவர். ஆகவே தெரிந்தவர்கள் என்பதை விட தேவையானவர்களை அடையாளம் கண்டு உங்கள் வாக்கை அளியுங்கள்.

இன்று போரில் உயிர் நீத்த மக்களுக்கான மே18 நினைவேந்தலை யார் செய்வது என்ற போட்டி ஏற்பட்டுள்ளது. எனவே அதனை அனுஸ்டிப்பதற்காக மாநகரசபை எல்லைக்குள் ஒரு தூபி அமைக்கப்படும். அங்கு அரசியல் கலக்காது பொதுக்கட்டமைப்பின் கீழ் அந்த நினைவேந்தலை செய்வதற்கான ஒழுங்கமைப்பினை நாங்கள் செய்து கொடுப்போம்.

அத்துடன் நகரத்தில் நடைபாதை வியாபாரிகள் விடயத்தில் அவர்களும் பாதிக்கப்படாத வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும். அத்துடன் மாநகரத்தை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருக்க வேண்டியது அவசியம். அதற்காக மாநகரசபையின் வழிகாட்டலில் பொது அமைப்புக்களின் உதவிகளை நாடுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

நாம் வெற்றிபெற்றால் அதை செய்வோம் இதை செய்வோம் என்று சொல்வதற்கும் அப்பால் மாநகரசபையின் மூலம் எவ்வாறான வேலைத்திட்டங்களை செய்யமுடியுமோ அதனை முழுமையாக நிச்சயம் செய்வோம். - என்றார். 100

## பேக்கரி உரிமையாளரிற்கு 20 ஆயிரம் ரூபா தண்டம்



கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரிபணிமனைக்குட்பட்ட மலையாளபுரத்தில் கடந்த 24.04.2025 பொது சுகாதார பரிசோதகர் ஆ. டனாத் தலைமையிலான குழுவினரால் உணவுகையாளும்நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய பேக்கரி இனங்காணப்பட்டது. குறித்த பேக்கரியில் திகதி காலாவதியான பொருள்கள் மற்றும் காலாவதியான பொருள்களுக்கு மீள்திகதி இடல் போன்ற குறைபாடுகள் உட்பட பல குறைபாடுகள் இனங்காணப்பட்டன.

இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் ஆ. டனாதால் பேக்கரி உரிமையாளரிற்கு எதிராக நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை அன்றையதினமே விசாரணைக்கு எடுத்துகொண்ட நீதிவான் பேக்கரி உரிமையளரை குற்றவாளியாக இனங்கண்டு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தோடு கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார்.

## திகதி காலாவதியான பொருள்கள் விற்றவருக்கு ரூ. 40,000 தண்டம்



நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தனின்வழிகாட்டலிலும், ஆலோசனையிலும் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் உணவு கையாளும் நிலையங்கள், பூட்சிற்றிகள், பலசரக்கு வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த 16.04.2025 ஆம் திகதி கோண்டாவில் பொது சுகாதார பரிசோதகர் கந்தையா ஜெகானந்தன் தலைமையிலான குழுவினரால் பூட்சிற்றிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது பூட்சிற்றி ஒன்றில் வண்டுமொய்த்த பொருள்கள் மற்றும் திகதி காலாவதியான பொருள்கள்விற்பனைக்காகவைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து மேற்படி பொருள்களை கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர் கந்தையா ஜெகானந்தன், நேற்றையதினம் (செவ்வாய்க்கிழமை) யாழ் மேலதிக நீதிவான் நீதிமன்றில் பூட்சிற்றி முகாமையாளரிற்கு எதிராகவழக்குதாக்கல் செய்தார். வழக்கினை அன்றே விசாரணைக்கு எடுத்து கொண்ட மேலதிக நீதிவான் எஸ். லெனின்குமார், பூட்சிற்றி முகாமையாளரை குற்றவாளியாக இனங்கண்டு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார்.

## தோணா அபிவிருத்தி தொடர்பில் சாய்ந்தமருதில் கலந்துரையாடல்

(ஸாகிர்)

சாய்ந்தமருதில் தோணா அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் கோரிக்கைக்கு அமைவாக, சாய்ந்தமருதுபிரதேசசெயலகஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தோணா அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டு, அதற்கான ஒதுக்கீடு நாடாளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் பேரில், அவரது பண்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 3.2 மில்லியன் பெறுமதியான செயற்றிட்டம் கடந்த மாதம் செய்யப்பட்டிருந்தது.

அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில், தோணா அபிவிருத்திக்கான வேலைதிட்டத்தை ஆரம்பமாக முன்னெடுப்பதற்கான பணிப்புரைகளை உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு, அதற்கான ஆலோசனைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா வழங்கினார்.

இந் நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர், கல்முனை மாநகர ஆணையாளர் மற்றும் மாநகர பொறியியலாளர், சாய்ந்தமருது பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் துறை சார் பொறியியலாளர்கள், உரிய திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் உட்பட பலரும் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்நிகழ்ச்சித் திட்டமானது விரைவில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.







காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாக்குரிமை என்பது வெறும் மேடைப் பேச்சா?

இலங்கையின் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பாக ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் சிறீ லங்கா (Transparency International Sri Lanka - TISL) வெளியிட்ட சமீபத்திய அறிக்கை, நாட்டின் ஜனநாயக நம்பிக்கையிலே சில வெளிச்சக் கீற்றுகளை காட்டினாலும், பெரும்பாலான பகுதிகளில் மறுக்க முடியாத குழப்பங்களையும் தெரிவிக்கிறது. தேர்தல் சட்ட மீறல்கள் சிலர் கூறுவது போலத் ‘பாதுகாப்பான அளவில்’ குறைந்துள்ளனஎன்றாலும், அவைமுழுமையாகத் தீர்ந்துவிட்டதென்பது உண்மை இல்லை என்பதை அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களுக்கு, கடந்த பல ஆண்டுகளாக உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டு வருகிறது. இது வெறும் நிர்வாகத் தாமதமல்ல; தீவிர அரசியல் நோக்கங்களால் முடக்கப்பட்ட ஜனநாயக உரிமைக்கான சத்தமற்ற பழிதான். தற்போது நிலவுகின்ற தேர்தல் ஒத்திவைப்பு சூழ்நிலையைப் பயன்படுத்தி, ஆளும் குழு விரும்பும் பகுதிகளில் மட்டும் அபிவிருத்தி செய்வதாக ஜனாதிபதியின் மொழி அமைந்திருப்பது, மக்கள் உரிமை மீதான நேரடி அச்சுறுத்தலாகவே ட்ரான்ஸ்பரன்ஸியின் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி, வாக்குகளை கொள்வனவு செய்வதற்கான பொருட்கள் விநியோகம், அரச சொத்துக்களின் தவறான உபயோகம், அரச ஊழியர்கள் உள்பட சட்டவிரோத வன்முறைகளில் ஈடுபடுவது ஆகியவையும் இன்னும் நீடித்துவரும் ஆபத்துகளாக உள்ளன. இதற்கிடையே, வடக்கு கிழக்குப் பகுதியில் உள்ள மக்கள், தங்கள் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் உரிமையோடுதீர்மானிக்கவைக்கும்தேர்தல்களில் பங்கேற்கவே முடியாத சூழ்நிலையை எதிர்நோக்கி வருகிறார்கள்.

உள்ளூராட்சி சபைகள் என்பது மக்களிடம் நேரடியாகப் பேசும் அரசியல் அடித்தளமே. அவை இல்லாமல் வாழ்வாதார திட்டங்கள், நில உரிமை, குடிநீர், கல்வி, சுகாதாரம் போன்றவை பற்றி பேசவே முடியாது. ஆனால் தேர்தல் எப்போது நடத்தப்படும், ஏன் ஒத்திவைக்கப்படுகிறது, மக்களுக்கு எப்போது வாய்ப்பு வழங்கப்படும் என எளிய பதில்கள்கூட இல்லாமல் இருக்கின்றன.

தேர்தல்களில் சட்டவிரோத செயல்கள் குறைந்துள்ளன என்பதே ஜனநாயகத்தின் வெற்றி எனக் கருத முடியாது. உண்மையான வெற்றி என்பது, ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்களிக்கும் உரிமை நேர்மையாகவும் நியாயமாகவும் வழங்கப்படும் போதேதான் சாத்தியம். வாக்குரிமை என்பது மேடைகளில்

# திக்கம் வடிசாலைக்கு விடிவு காலம் பிறந்திருப்பதாகக் கருதுகின்றாராம்

### பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்



(சுபேசன்)

திக்கம் வடிசாலைக்கு தற்போது விடிவு காலம் பிறந்திருப்பதாகக் கருதுகிறேன் என பனை அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ந.கமலாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பனை அபிவிருத்திச்சபையினுடைய தலைவர் திக்கம் வடிசாலை விவகாரம் தொடர்பில் கைதடியில் இருந்து வடமராட்சி-திக்கம் வரை நடைபயணம் ஒன்றை முன்னெடுத்திருந்தநிலையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர் கமலாகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;-

நாட்டில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து பனை அபிவிருத்திச்சபையில் நிகழ்ந்த மாற்றம் மகிழ்ச்சியளிக்கின்றது.

நான் பனை அபிவிருத்திச்சபையில் கடந்த காலத்தில் பணியாற்றிய வேளையில் திக்கம் வடிசாலை உருவாகியிருந்தது.

திக்கம் வடிசாலை உருவாக்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள்-அதிகாரிகளின் பங்களிப்பு இருந்தது.

ஒரு சமுகத்தின் வளர்ச்சி மற்றும் எதிர்காலம் ஆகியன அதில் தங்கியிருந்தன. ஆனால் யுத்த நிலைமையில் அது நலிவடைந்தது.

யுத்த காலத்தின் பின்னர் திக்கம் வடிசாலையை மீட்டெடுத்திருக்க முடியும். ஆனால் கடந்த காலத்தில் அவர்கள் அதனைச் செய்யவில்லை. ஆனால் தற்போது திக்கம் வடிசாலைக்குவிடிவுகாலம்பிறந்திருப்பதாகக் கருதுகிறேன்.

பனை அபிவிருத்திச்சபையினுடைய தலைவர் திக்கத்தின் பெருமையை மக்கள் உணர வேண்டும் என தனது 50 ஆவது வயதில் நடைபயணம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

இது ஒரு தொடரும் போராட்டமாகவே அமையும். இதற்கு மக்கள் மற்றும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்பு அவசியம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# முகம் பார்த்து அரசியல் செய்பவர்களை மக்கள் இம்முறை நிராகரிக்கவேண்டும்

### பிரபாகரன் கோரிக்கை



(சுபேசன்)

இம்முறை உள்ளூராட்சிசபைத் தேர்தலில் முகம்பார்த்து அரசியல் செய்பவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும் என சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும் - இலங்கை தமிழரசுக்கட்சியின் சாவகச்சேரிப் பிரதேசசபையின் வரணிவட்டார வேட்பாளருமான சி.பிரபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

மக்கள் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களை இணங்கண்டு இம்முறை உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்ய வேண்டும். அதுவே ஓர் ஆரோக்கியமான நீடித்துநிலைத்துநிற்கக்கூடியசமுதாயத்திற்கு பொருத்தமான தெரிவாக இருக்கும்.

இவ்வாறு மக்கள் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் கிராமத்தில் மக்களின் இன்ப-துன்பங்களில் பங்கெடுப்பவர்களாகவும்,

குறிப்பாக ஏழை மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

வரணிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை அதிக தேவைப்பாடுகள் உள்ளன. அந்தத் தேவைப்பாடுகளை படிப்படியாக நிவர்த்தி செய்யக்கூடிய நபர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

தமது பகுதிக்கு-தமது உறவுகளுக்கு மாத்திரம் உதவி செய்து பாகுபாடு காட்டுபவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

சபை இல்லாத வேளைகளில் சில உள்ளூராட்சிசபைகள் தன்னிச்சையாக நடந்துகொண்டுள்ளன.

பக்கச்சார்பாக சில அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளன.

தேவைப்பாடுகள் உள்ள இடங்களைத் தவிர்த்து தேவைப்பாடு இல்லாத இடங்களில் அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளன. உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கான சேவை நிறுவனங்கள். அவை மக்களின் வரிப்பணத்தில் இயங்குகின்றன.

எனவே மக்கள் நலன் சார்ந்து-மக்களின் ஆலோசனைகளைக் கேட்டு அவை செயற்பட வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள்

(நூருல் ஹுதா உமர்)

புவியியல் தரவுகளை சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் தொடர்பான அடிப்படை கருத்துகள், கருவிகள் மற்றும் பயன்பாடுகளை அறிமுகப்படுத்தும் குறுகிய கால கற்கைநெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) புவியல்துறையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் தலைமையில் இடம்பெற்றது.

பிராந்தியத்தின் கல்வி மேன்பாட்டில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் பல்வேறு குறுங்கால கற்கை நெறிகளையும் முன்னெடுத்துவரும் சந்தர்ப்பத்தில், பல்கலைக்கழகத்தின் மூத்த பீடங்களில் ஒன்றான கலை கலாசார பீடமும் பல்வேறு குறுங்கால கற்கைநெறிகளை முன்னெடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில் புவியல்துறை ஆரம்பித்துள்ள கற்கைகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் இந்நிகழ்வுக்கு பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீதின் ஆலோசனையின் கீழ் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் கௌரவ அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியதுடன் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.



நிகழ்வின்போது இணைப்பாளர் விரிவுரையாள ஏ.எல். ஐயூப், சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலில், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச். முகம்மட் றினோஸ், ஆகியோரும் துறைசார்ந்த உரைகளை நிகழ்த்தினர்.




விரிவுரையாளர் எம்.எச்.எவ். நுஸ்கியாவின் நன்றியுரையுன் முடிவுற்ற குறித்த நிகழ்வில் சமூகவியல் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ்.எம். ஐயூப், புள்ளிவிவரவியல் மற்றும் பொருளாதார துறையின் தலைவர் விரிவுரையாளர் எஸ். சந்திரகுமார், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எல். பௌசுல் அமீர், கலாநிதி ஐ.எல். முகம்மட் சஹீர், எம்.என். நுஸ்கியா பானு சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.ரீ. அஹ்மட் அஷ்ஹர் ஆகியோருடன் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களும் பங்குகொண்டிருந்தனர்.






காலைக்கதிர்
Kalaikkathir

# எழுதிக்கொடுத்துப் பேசும் எம்.பி. உதுமாலெப்பை

## நிசாம் காரியப்பர் பகிரங்கமாக கிண்டல்

(அபு அலா)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஒவ்வொரு பிரதேசத்துக்கும் அரசியல் அதிகாரங்களை வழங்கி அழகு பார்த்து வருகின்ற கட்சியாகும். அந்தவகையில், அட்டாளைச்சேனை பிரதேசத்திற்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அதிகாரத்தை வழங்கியுள்ளோம் என்று கட்சியின் செயலாளரும், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் பாலமுனையில்களமிறங்கியுள்ளவேட்பாளர் களை ஆதரித்து இடம்பெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எஸ்.உதுமாலெப்பை நாடாளுமன்றத்தில் எவ்வாறு பேசவேண்டும் என்பதை நாங்கள் எழுதிக் கொடுப்போம். அதை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை பேசும்போது, அழகு பார்த்து சந்தோஷப்படுகின்ற கட்சியாகத்தான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இருக்கின்றது.



இவ்விடயம் மரபு ரீதியாக இருந்து வருகின்றது என்பதையும் உங்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இது தொடர்பில் யாருக்கேனும் சந்தேகம் இருக்குமாக இருந்தால் அவர்கள் என்னிடம் நேரடியாக கேட்க முடியும். நாங்கள் உண்மையைத்தான் சொல்லுகின்றோம். - என்றார்.

கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நிசாம் காரியப்பர் தேர்தல் பிரச்சார பொது மேடையில் இவ்வாறு பேசியமை தொடர்பில், கட்சியின் ஆதரவாளர்கள், போராளிகள் உள்ளிட்ட அட்டாளைச்சேனை பிரதேச மக்கள் தங்களின் ஆதங்கங்களை வெளியிட்டு வருவதுடன் நிசாம் காரியப்பர் பகிரங்கமாக மன்னிப்பு கோரவேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மூன்று குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் வழங்கல்

(சுபேசன்)

யாழ்.மாவட்டத்தில் தேவைப்பாடுடைய மூன்று குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக



அண்மையில் நல்லின ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எலிபன்ற் எயிட் ஹெல்பிங் கியூமன் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக மேற்படி வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் அதீத வெப்பம் ; ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பம் காரணமாக முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இணுவிலைச் சேர்ந்த 75 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இணுவில் பகுதியில் வீதியோரமாக உள்ள தோட்டக்காணி ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை முதியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு ஒப்படைத்தனர்.

மரண விசாரணையில் அதீத வெப்பம் காரணமாக உடலில் நீரிழப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எனது அப்பா விவசாயம் செய்தே என்னைப் படிக்க வைத்தார்

## வவுனியாவில் வணிகப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி உருக்கம்



எனது அப்பா விவசாயம் செய்தே என்னை படிக்க வைத்தார். நான் எனது இலக்கை அடைவேன் என வெளியாகிய உயர்தரப் பெறுபேற் றில் வணிகத்துறையில் வவுனியா மாவட்டத்தில் முதலிடம் பெற்ற நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய மாணவி பிதுர்சா சற்குணம் தெரிவித்துள்ளார்.

3ஏ சித்திகளைப் பெற்று முதலிடம் பெற்ற அந்த மாணவி மேலும் தெரிவிக்கையில் -

நான் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றேன். தற்போது வெளியாகிய உயர்தரப் பரீட்சைக் பெறுபேற்றில் வவுனியா மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளேன். நான் இப்படி வருவதற்கு துணையாக இருந்த பாடசாலை நிர்வாகத்திற்கு நன்றி. அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்களுக்கும் நன்றி. நான் ஆரம்ப கல்வியில் இருந்து உயர்தரம் வரை இங்கு தான் கல்வி கற்றேன். எனக்கு அந்த வகையில் உதவிய அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றிகள்.

எனது அப்பா விவசாயம் செய்து தான் என்னை படிக்க வைத்தார். எனக்கு படிக்க எந்த ஒரு தடையையும் அவர்கள் ஏற்படுத்தவில்லை. அவருக்கும் நன்றி தெரிவிகின்றேன். அம்மாக்கும் நன்றிகள். நான் பல்கலைக்கழகம் சென்று கணக்காளராக வேண்டும் என்பதே எனது அவா. அதை அடைவேன் எனத் தெரிவத்தார். 100

# வெசாக் தோரனை கண்காட்சி

(ஹஸ்பர்)



கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் மாகாண சபையின் பூரண பங்களிப்புடன், பாதுகாப்புப் படையினர் மற்றும் மாகாண சபையின் கீழ் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து, வெசாக் போயாவை மையமாகக் கொண்டு திருகோணமலையில் நடைபெறும் பந்தல் கண்காட்சி மற்றும் வெசாக் வலயத்தை ஒருங்கிணைக்கும் வகையில், இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கான கலந்துரையாடல் நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பணியை வெற்றிகரமாகச் செய்வதற்கு பொதுத்துறையின் முழு ஆதரவையும் வழங்க அனைத்துத் துறைகளும் ஒப்புக்கொண்டன.





# எனது கொடுப்பனவை பழுகாம வட்டார மக்கள் சமூக நலனோம்பு திட்டங்களுக்கு வழங்குவேன்

## தமிழரசுக் கட்சி வேட்பாளர் இந்திரநாதன் தெரிவிப்பு





பழுகாம வட்டாரத்திற்கான தேர்தல் பரப்புரை அலுவலகம் 26.04.2025 ஆம் திகதி வட்டார வேட்பாளர்களான நா.இந்திரநாதன் மற்றும் வீ.அரசரெத்தினம் ஆகியோரின் பிரசன்சன்னத்துடன் திறந்து வைக்கப்பட்டது.


இந்நிகழ்வில் பெருந்திரளான ஆதரவாளர்கள் கலந்துசிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் வேட்பாளர் நா.இந்திரநாதன் உரையாற்றுகையில் -

இந்தத் தேர்தலானது தேசிய கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு ஒரு சவாலான தேர்தலாகும். நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை வரைபடத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரம் மஞ்சள் நிறத்தில் ஒளிர்ந்தது. அந்த நிறமானது இம்முறை சிவப்பாக மாற்றுவதற்கு பயங்கரமான பிரயத்தனம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் மட்டக்களப்பில் தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றும் எனவும் -

நான் இத்தேர்தலில் வெற்றி பெற்றால் எனக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை எனது பழுகாம வட்டார மக்களின் சமூக நலனோம்பு திட்டங்களுக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், வாழ்வாதாரத் திட்டங்களுக்கும் வழங்கி வைப்பேன் எனவும் தெரிவித்தார்.

# உள்ளூர் சுற்றுலா பயணிகள் வீசிய குப்பையை அகற்ற நவடிக்கை



(கேதீஸ்)

நுவரெலியா வசந்த விழாவைக் காண நுவரெலியாவிற்கு வருகைதந்த உள்ளூர் சுற்றுலாப் பயணிகளால் மிகவும் ஒழுங்கற்ற முறையில் சாலைகளின் இருபுறமும் கொட்டப்பட்டிருந்த குப்பைகளை அகற்ற நுவரெலியா பிரதேச சபை நடவடிக்கை எடுத்தது. நுவரெலியாவிற்கு வருகை தரும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள், எந்தவொரு சூழ்நிலையிலும் சட்டவிரோதமாக கழிவுகளை வீசுவதை தவிர்த்து, அழகிய நுவரெலியாவின் பாதுகாப்பிற்கு பங்களிப்பு வழங்குமாறு நுவரெலியா பிரதேச சபை கேட்டுக்கொண்டுள்ளது.

ஏனெனில், இவ்வாறு வீசப்படும் பல்வேறு வகையான மக்காத கழிவுகள் நுவரெலியாவின் மிகவும் உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழலுக்கும் அதன் அமைப்புக்கும் நீர் நிலைகள் மற்றும் உயிரினங்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



●CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)

●NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# பாரதி வாழ்த்திய பாவேந்தர் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் ....... ஆஸ்திரேலியா**

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா ' என்று போற்றப்பட்ட வர்தான் எட்ட யபுரம் தந்த எங்கள் தமிழின் சொத்து பாரதியார். அவரின் கருத்துக்களை மனமிருத்தி அவரின் பாதையில் பல கவிஞர்கள் பயணப் பட்டிருக்கிறார் கள். ஒவ்வொரு கவிஞரும் பாரதியைப் பார்த்த பார்வைகள் அவரவர் சிந்த னைகளாக மலர்ந்திருக்கின்றன. பாரதியாரின் காலத்தில் கவிமணி தேசிக விநாகம் பிள்ளை இருந்திரு க்கிறார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை இருந்திருக்கிறார்.பாரதிதாசனும் இருந்திருக்கிறார். கவிமணி யின் சிந்தனை வேறாயும், நாமக்கல்லார் சிந்தனை , வேறாயும் , பாரதிதாசன் சிந்தனை வேறாகாவுமே அமைந்திருக்கிறது. இவர்கள் மூவருமே பாரதியைப் போற்றியாவர்களாகவே இருந்திருக்கிறார்கள். எட்டய புரத்துத்துப் பாரதிக்கு எட்டவே போகாமல் கிட்டவே நிற்கும் வாய்ப்பு புதுவையில் கால்பதித்த கனகசுப்பு ரத்தினத்துக்கே வாய்த்திருக்கிறது. கனகசுப்புரத்தினத்துக்குத்தான் எட்டயபுரத்து மகாகவி பாரதியின் ஆசீர்வாதம் கிடைத்தி ருக்கிறது. அந்த ஆசீர்வாதம்தான் ' பாரதிதாசன் ' என்று இன்றுவரை அவரை சமூகத்தில் பார்த்திடக் , கொண்டாட , வைத்திருக்கிறது என்பதைக் கருத்திருத்தல் அவசியமாகும்.

பாரதியையும் புரட்சிக்கவி என்று அழைக்கின்றோம். அவரின் வாரிசாக வாய்த்திருக்கும் பாரதிதாசனையும் அழைக்கின்றோம். இருவரையும் புரட் சியின் வடிவமாகவே பார்ப்பதையே சமூகமும் விரும்பி நிற்கிறது என்பதும் மனங் கொள்ளத்தக்கதாகும்.பாரதி வாழ்ந்த காலமோ முப்பத்தொன்பது ஆண்டுக ளேயாகும். ஆனால் பாரதிதாசன் அவரைவிட இருமடங்கு காலம் வாழ்ந்திருக்கிறார்.பாரதியின் தாசனாகவே வாழ்ந்திடவே பாரதி தாசன் ஆசைப்பட்டார். அதுவே தனக்கும் , தனது வாழ்வுக்கும் மிகவும் பெருமையானது என்றும் கூட அவர் எண்ணியே இருந்தார். பாரதியைப் போலவே அவரும் புதிதாய் , புரட்சியாய். சிந்தித்தார். சிந்தித்தவற்றைத் தன்னுடையபடைப்புகள்வாயிலாகச்சமூகத்தில்இடம் பெறவும் செய்தார். பாரதியின் தாசனாய் அவரின் வாரிசாக வாய்த்த பாரதிதாசன் தன்னுடைய காலத் துக்கு ஏற்ப தன்னுடைய சிந்தனைகளை புதிதாய் வெளிப்படுத்தினார் என்பதை மறுத்துரைத்துவிடல் முடியாது. பாரதியார் வாழ்ந்த காலம் பாரததேசம் அன்னியத்துக்கு அடிமைப்பட்டிருந்த காலம்.அவரின் வாரிசாய் வாய்த்த பாரதிதாசன் காலமே சுதந்திரக் காற்றினைப்பாரததேசம் சுவாசித்த காலமாகிவிட்டது. அதனால் தன்னுடைய குருவின் சிந்தனைகளை விட வித்தியாசமாய்சிந்திக்கும்அவசியம்பாரதிதாசனுக்கு அவசியமாய் ஆகிவிட்டது. அதனால் பாரதியின் சிந்தனைப் பாதையில் பயணித்தாலும் , தனக்கென வித்தியாசமான சிந்தனைகளை பாரதிதாசன் வெளிப்படுத்தி நிற்கிறார் என்பதுதான் உண்மை நிலையாகும்.

தம்முடைய குருவான பாரதியின் பிரிவை முன்னிட்டு பாரதிதாசன்

**நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா**
**காடு கமழும் கற்பூரச் சொற்கோ ......**
**திறம் பாட வந்த மறவன் , புதிய**
**அறம் பாட வந்த அறிஞன்**

இவ்வாறு உளமார உரைத்து நின்றாலும் அவரின் சிந்தனையானது மட்டும் பல நிலைகளில் வித்தி யாசமாய்அமைகின்றது என்பதுதான்உண்மையாகும். பாரதி தமிழைப் போற்றுகின்றார். அவரின் வாரிசான பாரதிதாசனும் போற்று கின்றார். பாரதி...

**' யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம் '**

என்று உலகத்துக்கு உரத்துத் துணிவுடன் சொன்னவர் என்றவகையில் பாரதி முன்னிற்கிறார் என்பதை எவருமே மறுத்திடல் இயலாது. ஆனால் அவரின் வாரிசாய் வாய்த்த பாரதிதாசனோ வித்தியாசமாய் தனது சிந்த ணையை முன் வைக்கிறார்.

**' தமிழுக்கும் அமுதென்று பேர் -**
**அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ்எங்கள்**
**உயிருக்கு நேர் '**

உலகமொழிகளில் இனிமையானது தமிழென்று குருவானவர் மொழிகின்றார். அவரின் மொழிதல் புதுமை யானதுதான். ஆனால்வித்தியாசமாய்சிந்தித்துதமிழினை உயிர் என்று காட்டுவதும் , இன்பத் தமிழ், அமுதம், என்று காட்டுவதும்பாரதிதாசனின் வித்தியாசமான சிந்தனையாய் வெளி ப்பட்டு நிற்கிற தல் லவா ! அமுதம் என்பது நிரந்தராமாய் உயிருடன் வாழப் பண்ணுவதாகும்.தமிழும்எம்மையெல்லாம் நிரந்தரமாய் வாழப் பண்ணும் என்னும் சிந்தனை, வியப்பாய் மலர்கிறதல்லவா ? பாரதியின் மொழிப் பற்றானது போற்றப் படவேண்டியதே. அன்னிய மொழியான ஆங்கிலத்தை அறவே வெறுத்தார். அன்னை மொழியான தமிழினையே அகத்தில் இருத்தினார். அரியாசனத்தில் அமர்த்தியே பார்த்தார்.பாரதி வட மொழியிலும் வல்லமை பெற்று விளங்கினார். அவருக்கு வடமொழியிலும் பற்றிருந்தது. ஆனால் அவரின் வழியில் பயணத்தை ஆரம்பித்த பாரதிதாசனோ முழுக்க முழுக்க தமிழ்மொழிப் பற்றாளராகவே தன் வாழ் நாளெல்லாம் விளங்கினார்.வடமொழியினை அவர் ஒதுக்கியே நின்றார். திராவிடமே அவரின் சிந்தையில் நிறைந்து காணப்பட்டது. இது அவரின் வித்தியாசமான சிந்தனை என்றும் சொல்லலாம் அல்லவா !

குருவான பாரதியின் தமிழ்மொழி பற்றிய சிந்தனையிலிருந்து வித்தியாசமாய் சிந்தனையினைத் தருவ தோடு அதற்காக அவர் பயன்படுத்தும் சொற் கோவைகளும் வித்தியாசமானதாகவே வருகிறது. மரபு யாப் பினைப் பயன் படுத்தினாலும் இங்கு வித்தியாசமாய்சிந்தித்துகூழைக்கூத்தரின்ஆட்டத்தை மனமிருத்தி அதனை ஆட்டத்தோடு கூடிய விதமாய் இசையுடன் பாட க்கூடியவகையில் தமிழையும், தமிழ் சமூகத்தையும் சிந்தித்திந்து அவரால் வழங்கப்பட்ட வித்தியாசமான சிந்தனையாய் இப்பாடல் அமைகிறது.

.................................................................................

**திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்**
**அஃகஃக கும்பிட்றேன் அல்லா ருக்கும்**
**அஃகஃக வரிஞ்சலா அமைந்திருங்க**
**மக்களை பெத்த மகரா சருங்க .....**
**என்னடா தம்பி ?**
**ஏண்டா அண்ணா ?**

**இதோபார் தம்பி எலும்புக்கூடு**
**சதையும் இல்லே சத்தும் இல்லை**
**ஆமாம் திடுகிடும் அதுக்குப் பேர்என்னா ? ...**
**இந்த மருந்துக்கு என்னா பேரு ?**
**உள்ளெ தொட்டா உசிரில் இனிக்கும் ;**

**தெள்ளுதமிழ் தம்பி தெள்ளுதமிழ் இதுதான் !**
**இந்த மருந்தே எலும்புக் கூட்டில்**
**தடவுறேன் தம்பி அடிமோ ளத்தை !**
**திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்**

**சிரித்தது பாரடா செந்தமிழ்க் கூடு !**
**விரிந்தது பாரடா அழிந்தநம் நாடு !**
**பாடுது பாரடா பைந்தமிழ் நாடு ....**
**தாயி மாரே தக்கப்ப மாரே !**
**மாயம் இல்லே மந்திரம் இல்லே**
**கருத்து வேணும் நம்ப**
**வருத்தம் நீங்க தேடணும் வழியே !**

தமிழினமானது எலும்புக்கூடாய் இருக்கிறதாம். அதில் சதையும் இல் லையாம் ! சத்துமே இல்லையாம் ! அதற்குச் சதையும் சத்தும் தந்து புத்துயிர் ஊட்டவேண்டும் என்னும் வித்தியாசமான சிந்தணையினைக்காட்டும்பாரதிதாசனை வியக்காமல்



இருந்திட முடியுமா !

பாரதி வாழ்ந்த காலம் அடிமையிருள் சூழ்ந்திருந்த காலம். பாரதியின் பார்வை பாரததேசத்தின் அடங்கி லும் பரவியே இருந்தது.பாரதத்தாயை மீட்டிடும் பாங்கில்பாரதியின்சிந்தனை அமைந்திருந்தது. ஆனால் அவரின் வாரிசான பாரதிதாசன் காலம் அவரின் சிந்தணையினை வேறு விதமாக்கி விட் டது.பாரதியின் வழியில் பயணித்தாலும் அத்தனையையும் ஏற்று நிற்க அவர் விரும்பாதவராய் வித்தியாசமாய் ஒவ்வொ ன்றையும் வெளிப் படுத்துகிறார். அந்த வகையில் ஒட்டு மொத்த இந்தியாவைவிட்டு அவரின் சிந்தனை யானது திராவிட மீட்பாய் மாறுகிறது. பாரதி தமிழை, தமிழினத்தைப் போற்றினார். அதற்காக பலவற்றை உரக்கவே சொன்னார். ஆனால் பாரதிதாசனோ திராவிடச் சிந்தனையாளராய், தமிழ்மொழியின் அடையா ளமாய் தனது வித்தியாசமான சிந்தனைகளால் எழுந்து நிற்கிறார்.

சமயநம்பிக்கையினை, தெய்வநம்பிக்கையினைப் பாரதி கைவிட விரும்பவேயில்லை. மூட நம்பிக்கை களை எதிர்த்தார். வெறுத்தார். ஆனால் தெய்வம் இருக்கிறது என்பதில் ஆணித்தரமாய் பாரதி வாழ் வெல் லாம் இருந்தார். இந்த இடத்தில் அவரின் வாரிசான பாரதிதாசன் வித்தியாசமாய் சிந்திக்கிறறார். ஆரம்ப த்தில் சக்தியைப் பாடியே பாரதியின் ஆசீர்வாதத்தைப் பெற்றவர் பிற்பாடு தெய்வீக சக்தியை விட்டு விட்டு மனித சக்தியையே பாடும் நிலைக்குள் வந்து விடுகிறார். பாரதி நாத்திகர் அல்ல. அவருள் ஆத்தீகம் அமர் ந்தே இருந்தது. ஆனால் வித்தியாசமாய் சிந்தித்த காரணத்தால் பாரதிதாசன் முழுதுமே நாத்திகராய் மாறி அதன் வழியில் பயணப்பட்டு , அது சார்ந்த அரசியலிலும் தன்னை ஈடு படுத்திக் கொள்ளுகின்றவராய ஆகியே விடுகிறார். இதனால் அவரின் சிந்தனைகள் தன்னுடைய குருவின் சிந்தனைகளிலிருந்து வித்தியா சமாய் புதிய பார்வையினையே காட்டுவதாகவே ஆகியும் விடுகிறது எனலாம்.

கல்விபற்றிய பாரதியின் சிந்தனையிலும்கூட பாரதிதாசன் வித்தியாசமாகவே தன்னுடைய சிந்தனை களை விதைக்கின்றார். பாரதியின் கல்வி பற்றிய சிந்தனையினை நோக்கும் பொழுது -

**வயிற்றுச் சோறிட வேண்டும் - இங்கு**
**வாழும் மனிதருக்கு எல்லாம்**
**பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்**

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**

தொடர்ச்சி 9ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# பாரதி வாழ்த்திய...

8ம் பக்கத் தொடர்ச்சி...........

**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

**வீடுதோறும் கலையின் விளக்கம்**
**வீதிதோறும் இரண்டொரு பள்ளி**
**நாடுமுற்றிலும் உள்ளவூர்கள்**
**நகர்களெங்கும் பலபலபள்ளி**
**தேடு கல்வியிலாத தொருவூரைத்**
**தீயினுக்கு இரையாக மடுத்தல்**

என்று தன்னுடைய கல்விபற்றிய சிந்தனையைப் பாரதி இப்படிக் காட்டி நிற்கிறார். பெண்களைக் கண்க ளாய் காணும் பாரதி பெண்கள் வீட்டுக்குள் முடங்கிக்கிடக்காமல் வெளியில் வந்து கற்று தேர்ந்திட கல்விச் சிந்தினையினை விதைத்தும் நிற்கிறார். புதுமைப் பெண்களாய் பெண்கள் வரவும் அழைப்பினை விடுக் கிறார்.

பாரதிவழியில் கல்வி பற்றிச் சிந்தித்தாலும் தனக்கே உரித்தான வித்தியாசமான சிந்தனைகளையும் அவர் முன்வைக்கிறார் என்பதுதான் கருத்திருத்த வேண்டியவிடயமாகும். பாரதிபோல் பெண்கல்வியை வலியுறு த்துகின்றார். பாரதியின் பார்வை வேறு . பாரதிதாசனின் பார்வையோ வேறு.

**‘ கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்**
**கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள் ‘**
**‘ மகளிரெலாம் கல்வியறி வொழுக்கமுள ராயின்**
**மருத்துவமே வேண்டாவாம் பிணிமூப்பு வாரா ‘**

**‘ கல்வியறிவுடைய பெண்கள்**
**திருந்திய கழனி அங்கே**
**நல்லறி வுடைய மக்கள்**
**விளைவது நவில வேநான் ‘**

**‘ கல்வியில்லாத பெண்கள்**
**களர்நிலம் அந்நிலத்தில்**
**புல்விளைந் திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை ‘**

**‘ கற்பது பெண்களுக்கா பரணம் - கெம்புக்**
**கல்வைத்த நகை தீராத ரணம் ‘**
**‘ பெற்றநல் தந்தைதாய் மாரே - நும்**
**பெண்களைக் கற்கவைப் பீரே**
**இற்றைநாள் பெண் கல்வி யாலே - முன்**
**நேறவேண் டும்வைய மேலே ‘**

பெண்கள் கல்வியின் சிந்தனையினைப் பாரதிதாசன் வித்தியாசமாய் வெளிப்படுத்துகிறார். சிறுவர்க்குக் கல்வி, ஆடவர்க்குக் கல்வி, முதியோர்க்குக் கல்வி உடல் ஊனமுற்றவர்க்குக் கல்வி என்று பாரதிதாசனின் புதிய சிந்தனைகள் எழுந்து நிற்கின்றன.

பொதுவுடமை பற்றிய வகையிலும் பாரதிதாசன் வித்தியாசமாய் சிந்திக்கிக்கிறார்.

**சித்திரச் சோலைகளே - உமை நன்கு**
**திருத்தஇப் பாரினிலே - முன்னர்**
**எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனர்**
**ஓஉங்கள் வேரினிலே**

**நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு**
**நெல்விளை நன்னிலமே - உனக்கு**
**எத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை**
**இறைத்தனர் காண் கிலமே**

**தாமரை பூத்த தடாகங் களே உமைத்**
**தந்த அக் காலத்திலே - எங்கள்**
**தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்**
**சொல்லலோ ஞாலத்திலே**

சோலைகளைப் பார்க்கிறார்.வயல்களைப் பார்க்கிறார். தாமரைத் தடாகங்களைப் பார்க்கிறார். அந்தப்பார்வையயினூடாக அதற்காக உழைத்துப் பாடுபட்ட உழைப்பாளிகளை அவர் மனம் எண்ணுகிறது. இப்படி எண்ணும் எண்ணமேதான் பாரதிதாசனின் புதிய சிந்தனையாக,வித்தியாசமான சிந்தனையாக இங்கே வந்து நிற்கிறது அல்லவா !

**ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்**
**உடையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ**

சமத்துவத்தை இப்படியாய் சிந்திந்து வித்தியாசமாய் பாரதிதாசனால்த்தான் பார்த்திட முடியும்.

**மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற**
**காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே**

**வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்**
**தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி**

என்று சமூக சிந்தினையினை சீர்திருத்த நோக்கில் பார்த்து வித்தியாசமான சிந்தனையாக தாலாட்டுப் பாடியவர் என்ற வகையில் பாரதிதாசனை வியந்து பாராட்டியே ஆகவேண்டும்.

கவித்துவம் மிக்கவர் பாரதிதாசன். கவிதை எழுதினார். நாடகம் எழுதினார். கட்டுரைகள் எழுதினார். நூல்கள் பல எழுதினார். திரையிலும் ஜொலித்து நின்றார். எங்கு சென்றாலும் பாரதிதாசன் என்னும் முத்திரையினைப் பதித்தே நின்றார். ‘ மகாகவி பாரதியார் தமிழனினத்துக்கு விட்டுப்போன மகத்தான மூன்று சொத்துக்களானவை ’ குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, ‘ பாரதிதாசன்‘ என்று எழுத்துலக ஜாம்பவான் கல்கி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு பாரதிதாசன் பார்க்கப்படுவதற்கு முக்கியமான காரணம் எது தெரியுமா அவரிடம் காணப்பட்ட வித்தியாசமான சிந்தனைகளே.

# ஓய்வுபெற்ற ஆசிரியமணி

(கேதீஸ்)



கொழும்பு ஹொலிரோசரி தமிழ் வித்தியாலய அதிபரும் ஹற்றன் பிரதேச முன்னாள் பிரபல கணித ஆசிரியருமான வெள்ளதுரை தேவதாஸ் தனது 37 வருட கல்வி சேவையிலிருந்து கடந்த வாரம் ஓய்வு பெற்றார்.

ஹற்றன்டிக்கோயாபுளியாவத்தைப்பிரதேசத்தைபிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் உயர் கல்வியை ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியில் கற்றார். 1988 ஆம் ஆண்டு கணித பாட ஆசிரியராக ஆசிரியர் தொழிலில் இணைந்துக்கொண்ட இவர் 1988 ஆம் ஆண்டு முதல் 2001 வரை டிக்கோயா புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார்.

1991 ஆம் ஆண்டு தொலைக்கல்வி ஊடாக தனது ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்தார். இவர் புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் வெற்றிக்கு பாதை வகுத்துத் தந்தவராவார். கணித பாடத்தை கற்பிப்பதோ கற்பதோ கடினமல்ல. அது எளிது என்கிற புதுப்புரட்சியை சமூகத்தின் மத்தியிலே ஏற்படுத்திய ஆளுமையாளர். மிக சுவாரசியமாக மாணவர்கள் விரும்பும் வகையில் கணிதம் கற்பிக்கும் கலையை ஏற்படுத்தியவர். இவரது கற்பித்தல் பாணி தனித்துவமானது. புளியாவத்தை,போடைஸ் பிரதேச கல்வி வளர்ச்சியில், பலரது கல்வி வாழ்வில் சுடரேற்றிய பெருமையும், பங்கும் இவருக்குண்டு. 2002 ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி இளமாணி பட்டத்தை பெற்றார்.

2001 ஆம் ஆண்டு புளியாவத்தை பாடசாலையிலிருந்து ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அவர் 2006 ஆம் ஆண்டு வரை அங்கு கடமையாற்றினார். 2006 ஆம் ஆண்டு அங்கிருந்து நிறைவேற்று அதிபராக டிக்கோயா டில்லரி பாடசாலைக்கு நியமிக்கப்பட்டார். இங்கு கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளின் வளர்ச்சியில் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கினார். 2012 ஆம் ஆண்டு நிரந்தர அதிபராக நியமிக்கப்பட்டார். 2015 ஆண்டு கொழும்பு முத்துவெல இந்து கல்லூரிக்கு பிரதி அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்று அங்கு 2018 வரை கடமையாற்றினார்.

அதன்பின்னர் கொழும்பு–ஹொலிரோசரி பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்று தனது ஓய்வுக் காலம் வரையான ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் அப்பாடசாலைக்கு மிகச் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கி வந்த நிலையில் கடந்த வாரம் தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறுவதற்கு இன்னும் மூன்று மாதங்கள் எஞ்சியுள்ள நிலையில் கடந்த வாரம் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியில் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மு. நவரட்ணராஜா உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகள் நமது சமூகத்திலே உருவாக தனது கற்பித்தல் உழைப்பை வழங்கியவர்களில் இவரும் ஒருவர். நுவரெலியா மாவட்டம் உள்ளிட்ட மலையகத்தின் பல பாடசாலைகளில் பணியாற்றுகின்ற திறன்மிகு கணித ஆசிரியர்கள் பலரை சிருஷ்டித்த பேரும் பெருமையும் இவரையேச் சாரும். இவரது வெற்றி அறுவடைக்கு களம் அமைத்துத் தந்த வள்ளலாக புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலய அப்போதைய அதிபர் மதிப்பிற்குரிய எஸ். சரவணப்பிரகாசம் விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கடற்படையினரினால் ஒலுவிலில் 3 நாள்களாக ஆழ்கடல் சுழியோடி கற்கையும் பயிற்சியும்

## ஏழு பேர் ஆழ்கடல் சுழியோடிகளாக தெரிவு

(இல்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை அல் உஸ்வா மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் படைக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயிலுனர்களுக்கு ஆழ்கடல் சுழியோடி பற்றிய கற்கை நெறியும், பயிற்சி நெறியும் கடந்த (26,27,28) ஆகிய தினங்களில் தொடர்ச்சியாக ஒலுவில் துறைமுகத்தின் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் சுழியோடி குழுவின் பொறுப்பதிகாரி லெப்டினன் கமாண்டோ பதிரானவின் தலைமையில் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் ஆழ்கடல் சுழியோடிகள் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், ஆழ்கடல் சுழியோடிகளுக்கு ஏற்படும் நோய்கள், ஆழ்கடல் சுழியோடி மூலம் மீட்பு, ஆழ்கடலில் எவ்வளவு தூரம் செல்லலாம், ஆழ்கடலில் பயணம் செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் என பல்வேறு ஆழ்கடல் சுழியோடி பற்றிய கற்கை நெறியும், பயிற்சி நெறியும் வழங்கப்பட்டது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் சாய்ந்தமருது, சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட ஏழு ஆழ்கடல்சுழியோடிகளுக்குமான விசேட ஏழு நாள்கள் பயிற்சி நெறி கடற்படையின் விசேட ஆழ்கடல்சுழியோடி குழுவினரால் வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.




குறித்த மீட்பு நடவடிக்கை மற்றும்உயிர்காத்தல்படையினரை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் அல்தாப், ஒலுவில் துறைமுகத்தின் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் சுழியோடி குழுவின் பொறுப்பதிகாரி லெப்டினன் கமாண்டோ பதிரான போன்றவர்களின் நேரடி கண்காணிப்பில் நடைபெற்று வருகிறது.

ஆழ்கடல்சுழியோடி பயிற்சியை தொடர்ச்சியாக மூன்று நாள்களாக வெற்றிகரமாக நடத்தி முடித்த ஒலுவில் துறைமுகத்தின் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் சுழியோடி குழுவின் பொறுப்பதிகாரி லெப்டினன் கமாண்டோ பதிரானவின் குழுவினருக்கு அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபருமான மௌலவி ஐ.எல்.எம். முஸ்தபா ஆழ்கடல் சுழியோடி சார்பில் நன்றியுரை தெரிவித்தார்.

மேலும், தொடர்ச்சியான மூன்று நாட்கள் நடைபெற்ற பயிற்சியின் மொழிபெயர்ப்பு சேவையினை மல்வத்தையைச் சேர்ந்த லோஷன் வழங்கியிருந்தார்.









காலைக்கதிர்
Kalaikkathir

# தேர்தல் குறித்து விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான முறைப்பாடுகளை தீர்ப்பது குறித்து உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வு செயலமர்வு திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு செயலமர்வானது தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தற்போதைய உள்ளூராட்சி முறைமையின் தனித்துவமான அம்சங்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விளக்கமளித்தார்.

இதன்போது பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நிகழ்நிலை மூலம் இணைந்து கொண்டு உரையாற்றினார்.

தேர்தல்களின் போது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்புக்கள் குறித்து சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தினேஷ் கருணாநாயக்கவும் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சட்ட பிரிவுக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தேர்தல் சட்டத்தின் சட்ட விதிகள் குறித்தும் விரிவுரைகளை வழங்கினர்.

தேர்தல் சட்டம், தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ மையம் மற்றும் காவல்துறையின் பொறுப்பு, தேர்தல் செலவின ஒழுங்குமுறை, பிரச்சார அலுவலகங்கள் மற்றும் பிரச்சார கட்டுப்பாடுகள் குறித்த தகவல்களை மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணை மற்றும் திட்டங்கள்) பி. பீ. சி. குலரத்ன அவர்களால் தெளிவூட்டப்பட்டன.





மேலும், பொலிஸ் அதிகாரிகளின் தேர்தல் கடமைகள் குறித்த விரிவுரையானது சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவால் நடத்தப்பட்டது.



இதன்போது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார, திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.கே.டி. நெரஞ்சன், பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.04.2025இல் வெளியிடப்பெற்றது